## வ/ப களுபோவிட்டியான டீ பெக்டரி லிமிட்டெட் - 2022/2023

---

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

வ/ப களுபோவிட்டியான டீ பெக்டரி லிமிட்டெட்டின் ("கம்பனி") 2023 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்டக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டம் என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் 2023 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனி கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு)

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இயலுமான அளவில் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.5.1 பெற வேண்டிய பணம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2013-2020 காலப்பகுதியில் தலைமை அலுவலகத்தில் பேணிச் செல்லப்படும் பெலவத்தே தனியார் கட்டிடம் மாதாந்த வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்ட போது செலுத்தப்பட்ட ரூபா.1,440,000 ஆன வைப்புத்தொகை தலைமை அலுவலகம் பத்தரமுல்லயில் மற்றுமொரு தனியார் கட்டிடத்திற்கு கொண்டு செல்லப்பட்ட போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிட தவறவிடப்பட்டிருந்தது. | கம்பனியால் கடுவெல மாவட்ட நீதிமன்றத்தில் கட்டிட உரிமையாளருக்கு எதிராக வழக.கொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. | வைப்புத் தொகையை துரிதமாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | ஹினிதும ஹில்ஸ் தொழிற்சாலையின் 04 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக முன்கொண்டு வரப்படும் பச்சை தேயிலை கொழுந்து விநியோகத்தர்களுக்க்கு வழங்கப்பட்டுள்ள ரூபா 536,185 ஆன முற்பண மீதிகள் மீளாய்வாண்டின் இறுதி அளவில் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஹினிதும ஹீல்ஸ் விநியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட முற்பணத்தில் நிறுவனத்திற்கு அறவிட வேண்டியிருந்த ரூபா 373,597 நிலுவைத் தொகையொன்று மூன்று போக்குவரத்து முகவர்களுக்குரியது என்பதால், அவர்கள் மீது சமரசச் சபை சட்டத்தின்படி சமரசம் செய்யப்படவில்லை என்ற சான்றிதழுடன் அவர்களுக்கான வழக்குத் தொடரப்பட்டுள்ளது. மீதித் தெகை தேயிலை கொழுந்து மற்றும் பணமாக தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படுகிறது. | உரிய முற்பண தொகையை துரிதமாக அறவிடுவதற்கு அல்லது அதற்கு பதிலாக கொழுந்து விநியோகஸ்தர்களிட மிருந்து தேயிலை கொழுத்தினை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2003 ஆம் ஆண்டில் அரச கம்பனிக்கு ரூபா 10,000,000 ஆன கடன் தொகையொன்று 22 வீத வட்டி வீதத்தின் அடிப்படையில் 12 தவணைகளில் அறவிடும் அடிப்படையில் வழங்கப்பட்டிருந்ததுடன் ஆரம்பப்பணம் 2022 ஜுன் 22 ஆம் திகதி மீள செலுத்தப்பட்டதுடன் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக அறவிடப்பட வேண்டிய ரூபா 51,574,327 ஆன வட்டி தொகை 2023 மார்ச 31 வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை | வட்டித் தொகையானது 2023 செப்டம்பர் 20 இற்கு முனனர் ஏற்றுக்கொள்ளக்கூடிய தவணைகளில் செலுத்தப் பட வேண்டும் என்றும், அவ்வாறு செய்யத் தவறினால், 2022 ஜுன் 23 அன்று எங்கள் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 10 மில்லியன் தொகை அன்றைய திகதியின் கடன் தொகையின் மற்றும் வட்டித் தொகையின் பெறுமதியின் சதவீதமாகக் கணக்கிடப்பட்டு வட்டித் தொகையின் ஒரு பகுதியும் திரும்பப் பெறப்படும் என்று 2023 ஜுன் 21 திகதியிட்ட கடிதம் மூலம் BCC நிறவனத்திற்கு தெரிவிக்கப்பட்டது. | ஒப்பந்தத்தின் பிரகாரம் வட்டி தொகையை துரிதமாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2021 நவம்பர் 16 ஆம் திகிதய 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 3 ஆம் பந்தி | கம்பனியின் மனிதவள முகாமைத்துவம் உட்பட செயற்பாட்டு நடைமுறை மற்றும் கட்டுப்பாடு தொடர்பான செயல்வழிக் கையேடொன்று தயாரிக்கப்பட்டு தேவையான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | மனிதவள முகாமைத்துவம் உட்பட செயற்பாட்டு நடைமுறை மற்றும் கட்டுப்பாடு தொடர்பான வரைவு செயல்வழிக் கையேடொன்று தயாரிக்கப்பட்டு 2023 மே மாதத்தில் பணிப்பாளர் சபையின் அங்கிகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அதற்காக பணிப்பாளர் சபையின் அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது. 2023 ஆகஸ்ட் 30 ஆம் திகதி இக்கைநூர்ல் பொது முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்படுவதற்கு சமர்ப்பிக்கப் பட்டுள்ளது. | செயல்வழிக் கையேட்டிற்கான அங்கிகாரம் பெறப்படுதல் மற்றும் அதன் பிரகாரம் நிர்வாக நடவடிக்கை மேற்கொள்ளப் படுதல் துரிதமாக மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் வரிக்குப் பின்னரான தேறிய இலாபம் ரூபா 220,800,775 ஆக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் வரிக்குப் பின்னரான தேறிய நட்டம் ரூபா 7,298,752 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 228,099,527 ஆன முன்னெற்றமொன்று அவதானிக்கப்பட்டது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது முடிவுற்ற தேயிலை விற்பனை வருமானம் ரூபா 1,594,280,430 ஆல் அதிகரித்தமை மற்றும் கழிவு தேயிலை விற்பனை வருமானம் ரூபா 15,312,553 ஆல் அதிகரித்தமை ஆகியன இம்முன்னேற்றத்திற்கு பிரதான காரணங்களாக இருந்தன.

### 2.2 பிரதான வருமான மற்றும் செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

கடந்த வருடத்திற்கு ஒப்பாக கம்பனியின் விற்பனை வருமானம் 153 சதவீதத்தால் அதிகரித்திருந்துள்ளதுடன் இந்த அதிகரிப்பிற்கு பிரதானமாக களுபோவிடியான தேயிலை தொழிற்சாலையின் விற்பனை வருமானம் ரூபா 1,306,037,232 ஆல் அதிகரித்தமை தாக்கம் அளித்துள்ளதாக அவதானிக்கப்படுகிறது.அவ்வாறே நிலையான வைப்பு வட்டி வருமானம் கடந்த வருடத்திற்கு ஒப்பாக அதிகரித்த காரணத்தால் மீளாய்வாண்டின் நிதி வருமானம் 132 சதவீதத்தினால் உயர்வடைந்துள்ளது. செலவின அலகு பகுப்பாய்வில் விற்பனை கிரயம் உள்ளடங்களாக ஏனைய பிரதான செலவினங்கள் கடந்த வருடத்திற்கு ஒப்பாக உயர்வடைந்துள்ளமை. அவதானிக்கப்பட்டது.

### 2.3 விகிதப் பகுப்பாய்வு

மீளாய்வாணடின் நடைமுறை மற்றும் துரித சொத்துக்கள் விகிதம் முறையே 4:1 மற்றும் 2:1 ஆக காணப்பட்டதுடன் கடந்த வருடத்தில் அவ்விகிதங்கள் 2:1 மற்றும் 1:1 ஆக காணப்பட்டது. 2022/2023 ஆம் ஆண்டுகளில் இருப்பு, குறுங்கால வைப்புக்கள் மற்றும் பணம்ஈபணத்திற்கு சமனானவைகளின் கூட்டுத்தொகை ரூபா 603,889,226 ஆக இருந்தமை, அதாவது அதிகப்படியான மூலதன நிலைமையொன்று காரணமாக இவ்விகிதங்கள் உகந்த மட்டத்தை விட உயர்ந்த மதிப்பொன்றை எடுத்திருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | களுபோவிடியான தேயிலை தொழிற்சாலை அமைந்துள்ள ரூபா.23,000,000 ஆன மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கு வைக்கப்பட்டுள்ள 4.075 ஹெக்டேயர்கள் பரப்பளவான காணியில், 1989 மற்றும் 1996 காலப்பகுதியில் 15 குடியிருப்பாளர்கள் அத்துமீறிக் குடியேறியிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் இச்சிக்கலைத் தீர்ப்பதற்கு கம்பனி தவறியிருந்தது. | களுபோவிடியான தேயிலை தொழிற்சாலை அமைந்துள்ள முழு நிலத்தையும் அளவீடு செய்வதற்கான பணிப்புரைகளை வழங்குமாறு பெருந்தோட்ட அமைச்சின் ஊடாக பிடபெத்தர பிரதேச செயலகத்திடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. | சட்டரிதியான உரிமை பரீட்சிக்கப்பட்டதன் பின்னர் சட்ட நடவடிக்கைகள் மூலம் காணியின் உரிமை தீர்வு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | தேயிலை சக்தி நிதியத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட ஹினிதும ஹில்ஸ் மற்றும் மனிக்டிவல தேயிலை தொழிற்சாலைகள் முறையே 2012 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் களுபோவிடயான தொழிற்சாலை கம்பனிக்கு செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக சாட்டப்பட்டதுடன் கம்பனியினால் தேயிலை சக்தி நிதியத்தினை நடாத்திச் செல்வதில் காணப்பட்ட சிக்கல்கள் காரணமாக நிதியத்திற்கு 2015 ஏப்ரல் 09 திகதி ரூபா 50 மில்லியனான கடன் தொகை வழங்கப்பட்டிருந்தது. 2019 மார்ச் 19 ஆம் | மெனிக்டிவெல தொழிற்சாலை அமைந்துள்ள காணியை சுவீகரிக்கும் நோக்கத்தில் திருத்தம் இன்றி சுவீகரிக்க அனுமதியளிக்கப்பட்டு யட்டிநுவர பிரதேச செயலகத்தின் ஊடாக அதனை குத்தகை அடிப்படையில் நிறுவனத்திற்கு வழங்கும் பணிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஹினிதும | அமைச்சரவை தீர்மானத்திற்கமைய தேயிலை தொழிற்சாலைகளின் உரித்தினை கம்பனிக்கு சுவீகரிப்பதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திகதிய அமப/19/0743/117/024 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்திற்கு அமைய இந்த தொகை மற்றும் உரிய வட்டிக்கு ஹினிதும மற்றும் மெனிக்டிவெல தேயிலை தொழிற்சாலைகளின் உரித்து சட்டரீதியாக கம்பனிக்கு சுவீகரிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் கைத்தொழிற்சாலைகளின் சட்ட ரீதியான உரித்து மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் சுவீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | தொழிற்சாலைக்கு சொந்தமான காணியை குத்தகை அடிப்படையில் நிறுவனத்திற்கு வழங்குவதற்கு 2019 ஆம் ஆண்டுக்கான மதிப்பீட்டைப் பெறுதல் காணி சீர்திருத்த ஆணைக்குழவினால் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் அதனை பெற்றுக் கொண்டவுடன் குத்தகை அடிப்படையில் எமது நிறுவனத்திற்கு வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (இ) | நிதிக்கூற்றுக்களில் ரூபா 1,400,000 பெறுமதியில் கணக்கிடப்பட்ட களுபோவிட்டியன தேயிலை தொழிற்சாலையின் தொழிற்சாலை அதிகாரியின் உத்தியோகபூர்வ இல்லம், 2022 ஜூன் 15 முதல் ஜுலை 15 வரையான காலப்பகுதியில் புனரமைப்பிற்காக ரூபா 1,950,000 தொகையொன்று மதிப்பிடப்பட்டுள்ள போதிலும் 2023 ஜுலை 25 கணக்காய்வு திகதி வரையில் அதன் பணிகள் தொடங்கப்படாததுடன் பயன்படுத்த முடியாத நிலையில் தொடர்ந்தும் காணப்பட்டு வருகின்ற இந்த உத்தியோகபூர்வ இல்லத்தை உடனடியாக சரி செய்யாவிட்டால் நிறுவனமே அதிக செலவுகளை ஏற்க வேண்டியிருக்கும் என்பதும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | 2023/24 நிதியாண்டில் கொள்முதல் செயல்முறை தொடங்கப்பட்டுள்ளதுடன் தற்போது ஏலதாரர்கள் சமர்பித்த ஏலங்கள் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவால் மதிப்பீடு செய்யப்பட்டு அடுத்த மாதத்திற்குள் கொள்முதல் செயல்முறை முடிக்கப்பட்டு பொருத்தமான ஏலதாரருக்கு வழங்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அவ்வப்போது பராமரிப்பு மற்றும் திருத்தப் பணிகளை மேற்கொண்டு சொத்துகளை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | களுபோவிட்டியன தேயிலை தொழிற்சாலையில் நீர் சுத்திகரிப்பு அமைப்பொன்று நிறுவுவதற்காக 2021 ஜுன் 23 அன்று ரூபா 534,200 இற்கு ஒரு தனியார் வழங்குனருக்கு வழங்கப்படுவதற்கான சிவில் பணிகளுக்காக 2023 மார்ச் 31 இல் கம்பனியால் ரூபா 336,236 செலவிட்டுள்ள போதிலும் 2023 ஜுலை 25 கணக்காய்வு திகதி வரையில் வழங்குனரால் இந்த அமைப்பை நிறுவுவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கட்டுமானப் பொருட்களின் விலைகள் வேகமாக அதிகரித்துள்ளதால் ஏல விலையின் கீழ் பணிகளை முடிக்க முடியாது என ஏலதாரர் தெரிவித்துள்ளார். கொடுக்கப்பட்ட முற்பணம் 2023 ஆகஸ்ட் 24 அன்று எங்கள் நிறுவனத்திற்கு திரும்பப் பெறப்பட்டு, மீண்டும் விலை மனுக்கள் அழைக்கப்பட்டு, நீர் சுத்திகரிப்பு தொடர்பான கொள்முதல் பணிகள் 2023/24 நிதியாண்டின் 03 ஆவது காலாண்டில் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. | நீர் சுத்திகரிப்பு அமைப்பு விரைவில் நிறுவப்பட வேண்டும |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | புதிய தொழில்நுட்பத்திற்கு ஏற்ப தொழிற்சாலைகளை மாற்றியமைக்க அரசு மானியமாக 2021 செப்டம்பர் 15 அன்று நிறுவனத்திற்கு ரூபா 18,204,900 ஆன மானியம் வழங்கப்பட்டிருந்தது. இதன் கீழ் அங்கீகரிக்கப்பட்ட கொள்வனவு பணிகளில், தெரங்கல மற்றும் ஹினிதும தொழிற்சாலைகளில் அரைக்கும் செயல்முறையை வினைத்திறனாக்குவதற்கு புதிய தொழில்நுட்ப இயந்திரங்களை நிறுவுதல் மற்றும் தன்னியக்கமாக்கல் செயற்திட்டத்தின் பணிகள் நிறைவடைந்துள்ளதுடன் அதற்காக செலவிடப்பட்ட கிரயம் ரூபா 10,348,000 ஆகு CTC வெட்டிகளை கூர்மைப்படுத்துவதற்கான கணினிமயமாக்கப்பட்ட தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துதல் மற்றும் 02 CTC தேயிலை தர நிர்ணய இயந்திரங்களை வாங்குதல் மற்றும் நிறுவுதல் போன்ற பிற பணிகள் 2023 மார்ச் 31 வரை தொடங்கப்படாததுடன் ரூபா 7,856,900 ஆன மானியம் சேமிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | சீரீசீ கட்டர் கூர்மைப்படுத்துவதற்கு கணினிமயமாக்கப்பட்ட தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதற்கு விலைமனுக்கள் கோரப்பட்டதுடன் இரண்டு வழங்குநர்களினால் விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்பட்ட போதிலும், மதிப்பிடப்பட்ட தொகையை விட மனுக்களின் விலை அதிகூடிய பெறுமதியை கொண்டிருந்தமையால் வழங்குநர்களிடம் இருந்து விலை திருத்தம் கோரப்பட்டபோதிலும் அதற்கான இணக்கம் தெரிவிக்கப்படாததால் பெறுகைக் குழுவினால் மதிப்பிடப்பட்ட தொகை அதிகரிக்கப்பட்டு மீண்டும் 2022/2023 ஆம் ஆண்டில் விலைமனுக்களை கோருவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது. இரண்டு தேயிலை தர நிர்ணய இயந்திரங்களை வாங்குவதற்கு சீரீசீ விலைமனுக்கள் கோரப்பட்டபோதிலும் எந்தவொரு வழங்குநரும் மனுக்களை வழங்க தயாராக இல்லை என்பதால், ஏல ஆவணங்கள் வழங்குநர்களை ஈர்க்கும் வகையில் மீண்டும் தயாரிக்கப்பட்டு விலை மனுக்கள் கோரப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | புதிய தொழில்நுட்பத்திற்கு ஏற்ப தேயிலை தொழிற்சாலைகளை மாற்றியமைக்கும் செயற்திட்டம் விரைவாக முடிக்கப்பட வேண்டும். |